R4780

## ONE SACRIFICE SUFFICIENT

# ஒரே பலி போதுமானது

"அவர் பிரதான ஆசாரியர்களைப் போல முன்பு சொந்த பாவங்களுக்காகவும், பின்பு ஜனங்களுடைய பாவங்களுக்காகவும் நாடோறும் பலியிட வேண்டுவதில்லை; ஏனெனில் தம்மைத் தாமே பலியிட்டதினாலே அதை ஒரே தரம் செய்து முடித்தார்." எபிரேயர் 7:27

இந்த பலியை செலுத்துவதில் எந்த வகையில் சபையின் அடையாளம் காணப்படுகிறது என்று கேட்கப்படுகிறது.

அப்போஸ்தலருடைய கருத்தை பெறுவதற்கு இவைகளில் ஒரு கருத்தை ஏற்றுக்கொள்ள நாம் வலியுறுத்தப்படுகிறோம். இதில் பிரதான ஆசாரியன் என்பது அவரது சரீரத்தை தவிர்த்து நமது கர்த்தராகிய இயேசுவை மாத்திரம் குறிப்பிடுகிறது அல்லது இது அவரது சரீரத்தை தவிர்த்து நமது கர்த்தராகிய இயேசுவை மாத்திரம் குறிக்காது.

இன்னொரு இடத்தில் தேவன் சபையை முன்னறிந்திருக்கிறார் என்று அப்போஸ்தலர் நமக்கு கூறுகிறார். ஆகையால் தெய்வீக திட்டத்தில் அது முன்னறியப்பட்டது. அதாவது ஒரு சபையானது பாவிகளிடமிருந்து தெரிந்துகொள்ளப்பட வேண்டும் என்பதும் அதற்கு இயேசுவே தலையாக இருக்க வேண்டும் என்பதும் தெய்வீக திட்டம். தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமா -யிருப்பதற்கு, உலகத் தோற்றத்திற்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மை தெரிந்து கொண்டபடியே "நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய் தமக்கு சுவிகார புத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார்." (எபேசியர் 1:4,6) வேறு ஒரு கருத்தை எடுப்போமானால், வேத வாக்கியங்களைப் பொருத்தவரை குருட்டுத்தனத்தை குறிப்பிடும். இந்த காரணத்திற்காக நாம் பார்க்கிற இந்த வசனத்தில் பிரதான ஆசாரியன் என்பது தலையும் சரீரமும் சேர்ந்த முழு ஆசாரியனை பரிசுத்த பவுல் குறிப்பிடுகிறார் என்று நாங்கள் நினைக்கிறோம்.

திட்டத்தின் இந்த அம்சம் சுவிசேஷ யுகம் முடிவு வரை வெளிப்படுத்தப்படாமல் இருந்தாலும், அப்போஸ்தலர் யுக மாற்றத்தைக் குறித்தும், ஆசாரிப்புக் கூடாரத்தைப் பற்றிய அனைத்தும் மற்றும் மகா பரிசுத்தஸ்தலமும், சுவிசேஷ யுகத்தின் மேலான பலிகளுக்கு இடங்கொடுக்கும்படியாக நீங்கிப் போகின்றன என்றும் அந்த காரியங்களுக்கு பதிலாக இந்த காரியங்கள் வருகின்றன என்றும் கூறுகிறார். அப்போஸ்தலர் நியாயப்படுத்துவது இதைத்தான். ஆகையால் பிரதான ஆசாரியனைக் குறித்து அவர் பேசும் போது "ஒரே தரம் செய்து முடித்தார்" என்று கூறுகிறார். அதாவது ஒரே பலியின் இரண்டு பாகங்களை அவர் குறிப்பிடுகிறார். ஆசாரியன் ஒரு பலியின் ஒரு பாகத்தை மட்டுமே செலுத்தாமல், ஆசாரியன் முதலாவது நிழலான காளையையும் அதன்பிறகு நிழலான ஆட்டுக்கடாவையும் செலுத்தினார் என்று குறிப்பிடுகிறார்.

நிழலில் இவைகள் ஒவ்வொரு வருடமும் செய்யப்படுகின்றன. ஆனால் நிழலைக் காட்டிலும் பெரியதும், உண்மையிலேயே பாவத்தை நீக்கக்கூடியதுமான உண்மைப் பொருளில், ஒரே தரம் செய்து முடித்தார். ஒவ்வொரு வருடமும் இதை செய்வதற்குப் பதிலாக, நிழலான பாவ நிவாரண நாளின் பலிகளைப் பற்றி குறிப்பிடப்பட்டது போல, மகா பிரதான ஆசாரியன், தமது சரீர அங்கங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களின் சார்பாக உண்மைப் பொருளான காளையையும் அதன்பிறகு உலக மனுக்குலத்தின் சார்பாக உண்மைப் பொருளான ஆட்டுக்கடாவையும் பலியாகக் கொடுத்தார்.

இதன் இரண்டாம் பாகம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை என்பதையும் நாம் காண்கிறோம். அதுவும் நிறைவேறின பிறகு நீண்ட காலமாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மகிமை வரும்–"கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளும் அவைகளுக்கு பின்வரும் மகிமைகளும்." (1பேதுரு 1:11) மறுபடியும் "இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல." (ரோமர் 8:18)